தினமணி

**முல்லைப் பெரியாறு இறுதி அறிக்கை: பிப்ரவரியில் தாக்கல்**
First Published : 25 Jan 2012 12:39:00 AM IST

நமது நிருபர்

புது தில்லி, ஜன. 24: முல்லைப் பெரியாறு அணை தொடர்பான நீதிபதி ஆனந்த் குழுவின் இறுதி அறிக்கை பிப்ரவரி மூன்றாவது வாரத்தில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று குழு உறுப்பினரும் உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியுமான கே.டி. தாமஸ் தெரிவித்தார்.

முல்லைப் பெரியாறு அணையின் இறுதி அறிக்கையை வடிவமைக்க நீதிபதி ஆனந்த் தலைமையிலான ஐந்து பேர் குழுவின் கூட்டம் தில்லியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழகத்தின் சார்பில் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஏ.ஆர். லட்சுமணன், கேரள அரசு சார்பில் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி கே.டி. தாமஸ், மத்திய நீர்வளத் துறையின் முன்னாள் செயலர் தட்டே, மத்திய நீர்வள ஆணையத்தின் தலைமைப் பொறியாளர் மேதா ஆகியோர் பங்கேற்றனர்.

அணை தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வு அறிக்கைகளை வைத்து குழுவினர் ஆலோசனை நடத்தினர்.

இந்தக் கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி கே.டி. தாமஸ் கூறியது: இந்த விவகாரம் தொடர்பாக அனைத்து ஆய்வு அறிக்கைகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இறுதி அறிக்கை பிப்ரவரி மூன்றாவது வாரத்தில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும். குழுவின் கூட்டம் புதன்கிழமையும் தொடரும் என்றார்.

**மாதவரத்தில் அரசு தோட்டக்கலை பண்ணை**
First Published : 25 Jan 2012 02:22:44 AM IST

சென்னை, ஜன. 24: சென்னை மாதவரத்தில் தமிழ்நாடு அரசு தோட்டக்கலை மற்றும் மலைப் பயிற்கள் துறையின் சார்பில் அரசு தோட்டக்கலைப் பண்ணை இயங்கி வருகிறது.

இது குறித்த செய்திக் குறிப்பு: சுமார் 5 ஹெக்டர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பண்ணையில் தரமான பூச்செடிகளும், மரக்கன்றுகளும் சாகுபடி செய்யப்படுகின்றன. இவை அரசு

துறைகளுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும், பொது மக்களுக்கும் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும், பொது மக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு தேவைப்படும் பூச்செடிகளும் அவர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப பயிர் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. பொது மக்கள் தங்கள் வீடுகளில் அழகு பூச்செடிகள் வளர்க்க தொழில்நுட்ப உதவியும் இலவசமாக வழங்கப்படுகிறது.
இந்தச் பூச்செடிகள் ரூ.5 முதல் ரூ. 60 வரை விற்கப்படுகிறது. தொடர்புக்கு: 9444129120.

**புயலில் தப்பினாலும் தண்ணீரின்றி காயும் பயிர்கள்**

நமது நிருபர்

First Published : 24 Jan 2012 03:21:23 PM IST

புதுச்சேரி, ஜன. 23: புதுச்சேரியில் வீசிய புயலில் தப்பிப் பிழைத்த பயிர்களும் பாசன நீரின்றி காயும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால், பாசனத்துக்கான மின் இணைப்புகளை சீரமைக்கும் நடவடிக்கையில் மின்துறை தற்போது இறங்கியிருக்கிறது.
புதுச்சேரியில் பாசனப் பரப்பான சுமார் 17 ஆயிரம் ஹெக்டேர் விளைநிலங்களும் புயலில் சேதமடைந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதனால், வேளாண் தொழிலில் ஈடுபட்டுள்ள விளை நிலங்களின் உரிமையாளர்கள் அனைவருக்குமே நிவாரணம் கிடைக்கும்.
இந்நிலையில், கடந்த 25 நாள்களாக விளை நிலங்களுக்குத் தண்ணீர்ப் பாய்ச்ச முடியாத சூழல் இருக்கிறது. இதனால் நீரின்றி பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டிருக்கிறது. உடனடியாக விளை நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டிய நிலையில் விவசாயிகள் இருக்கின்றனர்.
பலத்த காற்றில் நெற்பயிரில் இருந்த நெல் மணிகள் உதிர்ந்துபோயின. வெறும் பதர்கள் மட்டுமே தற்போது மிஞ்சியிருக்கின்றன. தலை சாய்ந்து கிடக்கும் நெற்பயிரை அறுவடை செய்து பார்த்தாலே, அதில் இருக்கும் நெல் மணிகளும் எவ்வளவு என்பது தெரியவரும்.
இதனால் 100 மூட்டை நெல் கிடைத்த இடத்தில், தற்போது 10 மூட்டை நெல்லாவது கிடைக்கும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் இருக்கின்றனர். இதே நிலைதான் மேலும் பல வயல்களும் இருக்கின்றன.
அரசு அறிவித்திருக்கும் இழப்பீடு போதாத நிலையில், சேதமாகிய பயிர்களில் இருந்து ஏதேனும் கிடைத்தாலும் அது ஓரளவுக்காவது வரவுதான் என்ற நோக்கில் விவசாயிகள் இதை எதிர்பார்த்திருக்கின்றனர். இந்த மிச்சமிருக்கும் பயிரையும் நல்ல முறையில் அறுவடை செய்ய அவர்களுக்குத் தண்ணீர்த் தேவை.
வயல் பரப்பில் நட்டு வைக்கப்பட்டிருந்த மின்கம்பங்கள் புயலின்போது முற்றிலுமாகச் சாயந்துவிட்டன. இதனால், விவசாயிகளுக்கு உதவும் நோக்கில், அனைத்து ஏரிகளையும்

புதுச்சேரி அரசு திறந்து விட்டிருக்கிறது. ஆனாலும் ஏரி நீரும் பல பயிர்களுக்கு முறையாகச் சென்றடையாத சூழல் இருக்கிறது. எனவே, மின்சாரம் வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கைவிடுத்தனர்.

இதுகுறித்து மின்துறை அமைச்சர் தி.தியாகரஜானிடம் கேட்டபோது, தினமணி செய்தியாளரிடம் அவர் கூறியது:

புயல் ஓய்ந்ததும் உடனடியாக குடிநீர்த் திட்டங்களுக்கான மின் இணைப்பு தரப்பட்டது. அடுத்ததாக, வீடுகளுக்கும், மருத்துவமனைகள், பள்ளிகளுக்கான மின் இணைப்பும் வழங்கப்பட்டது. தற்போது பாசனப் பகுதிகளில் சாய்ந்துபோன மின்கம்பங்களை மாற்றும் பணி தொடங்கியிருக்கிறது. இதற்காக, காரைக்கால் பகுதியிலிருந்து 50 ஊழியர்களை புதுச்சேரிக்கு அழைத்து வந்திருக்கிறோம்.

ஆயிரக்கணக்கான மின்கம்பங்களை சரி செய்ய வேண்டியிருக்கிறது. மிகுந்த எடையுள்ள மின்கம்பங்களை வயலுக்குள் தூக்கிச் சென்று நடுவதற்குச் சற்று காலதாமதம் ஆகிறது. அதுவரை தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்யவே, ஏரிகள் அனைத்தையும் திறந்து விட்டிருக்கிறோம்.

விவசாய நிலங்களில் நடுவதற்கான மின் கம்பங்கள் கையிருப்பில் இருக்கின்றன. 15 நாள்களுக்குள் அனைத்து பகுதிகளுக்கும் மின் இணைப்பு தரப்பட்டுவிடும். இதற்கு பிறகே, தொழிற்சாலைகளுக்கான மின் இணைப்பை சரி செய்ய இருக்கிறோம் என்றார்.

**கருகும் கண்வலிக் கிழங்கு பயிர்: கவலையில் விவசாயிகள்**

First Published : 24 Jan 2012 10:30:22 AM IST

தாராபுரம், ஜன. 23: தாராபுரம் பகுதியில் பயிரிடப்பட்டுள்ள கண்வலிக் கிழங்குப் பயிர்கள் கருகி வருவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

÷தாராபுரம் வட்டாரத்துக்கு உள்பட்ட பொன்னிவாடி, நல்லாம்பாளையம், சாலக்கடை உள்பட 50-க்கு மேற்பட்ட கிராமங்களில் 20 ஆயிரத்துக்கும் அதிகமான ஏக்கரில் கண்வலிக் கிழங்குப் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

மருத்துவக் குணம் கொண்ட கண்வலிக் கிழங்குப் பயிர், ஆடியில் கிழங்கு நடப்பட்டு புரட்டாசியில் பூப்பூக்கும். இதன்படியே, வழக்கம்போல் இப்பகுதி விவசாயிகள் கிழங்கு விதைத்தனர்.

இச் செடிகள் பாதி வளர்ந்த நிலையில், இரண்டு மாதங்களுக்கு முன்பு பெய்த மழை, பூக்களைப் பாதித்தது. தொடர்ந்து இப்போது நிலவிவரும் கடும் பனி மற்றும் வெயிலால் செடிகள் காய் பிடிக்காமல் அழுகத் துவங்கியுள்ளது. இதன் காரணமாக, ஏக்கருக்கு ரூ. 2 லட்சம் வரை செலவு செய்து கண்வலிக் கிழங்கு பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

÷கட்சிசார்பற்ற தமிழக விவசாயிகள் சங்க திருப்பூர் மாவட்டத் தலைவர் ஏ. காளிமுத்து கூறுகையில், கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்பு கிலோ ரூ. 1,250-க்கு விற்ற கண்வலிக் கிழங்கு விதை, கடந்தாண்டு ரூ. 800 ஆக சரிவடைந்து பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியது.

÷இப்போது, தாராபுரம் மூலனூர் பகுதியில் கிராமப் பொருளாதாரமே கண்வலிக் கிழங்கு சாகுபடியால் பாதிக்கப்பட்டுள்ளது. அரசு தோட்டக் கலைத் துறை மூலமாக ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 1 லட்சம் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றார்.

**உர விலைக் கொள்கையில் மாற்றம் கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

First Published : 24 Jan 2012 10:04:37 AM IST

ஈரோடு, ஜன. 23: உர விலைக் கொள்கையில் மாற்றம் கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் (படம்).

÷ஈரோடு தலைமை அஞ்சல் நிலையம் முன்பு திங்கள்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு, தமிழக விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் எஸ்.பெரியசாமி தலைமை வகித்தார். கூட்டமைப்புத் தலைவர் பி.காசியண்ணன், தடப்பள்ளி அரக்கன்கோட்டை பாசன சங்கச் செயலர் சுபி.தளபதி, காலிங்கராயன் பாசன சபைத் தலைவர் வி.எம்.வேலாயுதம் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

÷மத்திய அரசு மேற்கொண்டு வந்துள்ள உர விலை நிர்ணயக் கொள்கையினால் உரங்களின் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. உர விலையைக் குறைக்கக் கோரி பல முறை வலியுறுத்தியும் மத்திய அரசு கவனத்தில் கொள்ளவில்லை.

÷இதேபோல் மின்திருட்டு என்ற பெயரில் மாட்டுத் தொட்டிகளுக்கு தண்ணீர் விடுவதற்கு விவசாயிகளிடம் மின் வாரியம் அபராதம் வசூல் செய்யும் நடவடிக்கையைக் கைவிட வேண்டும். நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,000, கரும்பு டன்னுக்கு ரூ.2,500 விலை நிர்ணயிக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டது.

---

தினமலர்

உண்மையின் உரைகல்

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 25,2012,00:00 IST




**மதுரா பவுல்ட்ரி புராடக்ட்ஸ்**: சரியான முதலீட்டில் நிரந்தர வருமானம் பெற காடை, நாட்டுக் கோழி, வான்கோழி வளர்ப்பில் ஆர்வமும் ஈடுபாடும் உள்ள பண்ணையாளர்கள் அல்லது 1500-2000 சதுர அடியில் உள்ள பண்ணைகள் உள்ளவர்களுக்கு பண்ணை அமைக்கும் முறைகள், அதன் தொழில்நுட்பம் மற்றும் பிராய்லர் காடை உற்பத்தி மற்றும் விற்பனை ஆலோசனைகளும் பெறலாம்.

**விற்பனைக்கு கிடைக்கும் விபரங்கள்**: காடை, நாட்டுக் கோழி, வான்கோழி குஞ்சுகள் (ஒருநாள் வயது), கின்னிக்கோழி, வான்கோழி குஞ்சுள் (ஒருநாள் வயது), தீவன வகைகள் (காடை மற்றும் கோழிகளுக்கு), பண்ணை உபகரணங்கள் (தண்ணீர், தீவன தட்டுகள்), புரூடிங் (இளம் குஞ்சு பராமரிப்பு) வளையம், காடை கேஜ்கள்.

கூட்டு ஒப்பந்த முறை அண்ட் பண்ணையாளர்களின் சொந்த விற்பனை வாய்ப்பு அவர்களின் தனிச்சிறப்பு. தொடர்புக்கு: 84894 88770, 91594 63816. மதுரா பவுல்ட்ரி புராடக்ட்ஸ், 4/58, நெடுங்குளம் ரோடு, ரிங்ரோடு ஜங்ஷன், சிந்தாமணி, மதுரை-9.

**பிராய்லர் காடை பண்ணை**: ஒரு சதுர அடிக்கு செலவு ரூ.150. வருடாந்திர பேட்சுகள் 8 முதல் 10. கிலோவுக்கு வருமானம் ரூ.12 முதல் 16 வரை. இடவசதி: ஒரு சதுர அடிக்கு 6 காடை (10 சதுர அடிக்கு 60 காடை). ஒரு சதுர அடி வருமானம் ஒரு சதுர அடி காடை ரூ.1 து 6 து 2 = 12ரூ. பேட்சுகள் 8.5 து ரூ.12 - 102/12 - 8.50ரூபாய் (மாதத்திற்கு). ஒரு சதுர அடிக்கு வளர்ப்புச்செலவு -

6 து 16 = 96ரூ. விற்பனை வாய்ப்பு - சொந்த விற்பனை சுலபம். தொழில் அனுபவம் - தொழில்நுட்பம் அவசியம். நிகர வருமானம் மாதத்திற்கு - 1000 சதுர அடியில் கிடைக்கும் வருமானம் ரூ.8500/- எதிர்கால வாய்ப்புகள் - நுகர்வோரின் தேவை, சுவை மற்றும் விருப்பம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே உள்ளது. ஒருவர் ஒரு காடையை முழுவதுமாக உண்ணலாம். கோழிக்கு மாற்றான உணவு காடை மட்டுமே.

**வெட்டிவேர் அபிவிருத்தி பண்ணை**: வெட்டிவேர் பவுடரை ஒரு குடம் தண்ணீருக்கு 5 கிராம் அளவு எடுத்து ஒரு பருத்தி நூல் துணியில் இறுக்க பிண்ணி பொட்டலமாய் கட்டி இரவு முழுவதும் போட்டு மறுநாள் காலை முதல் இரவு வரை அந்த தண்ணீரை குடிநீராக பயன்படுத்தி வந்தால் தாகம் தணியும். உடல் குளிர்வடையும். நறுமணம் தரும். தண்ணீர் அதிகம் பருகுவதைத் தூண்டும். வெட்டிவேர் பவுடரை தண்ணீருடன் சேர்த்து காய்ச்சி வடிகட்டி கசாயமாய் குடித்துவர சர்க்கரை நோய் கட்டுப்படும். புற்றுநோய், பாக்டீரியா மற்றும் பூஞ்சாணங்களால் ஏற்படும் நோய்களை, வெட்டிவேர் கசாயம் குடித்துவந்தால் தடுக்கலாம்.
அதிக பரப்பளவு உள்ள தரிசு நிலங்களை சீர்செய்து வளமான பண்ணையாக நிர்மானித்துதர ஆலோசனையுடன் அரசாங்க சலுகைகளுடன் நிர்மானித்து தருகிறார்கள். தொடர்புக்கு: சி.பாண்டியன், பி.காம்., சி.எம். விவசாய பண்ணை, (வெட்டிவேர் அபிவிருத்தி பண்ணை), குருவாடிப்பட்டி, கண்டக்காடு அஞ்சல், திருப்புத்தூர், சிவகங்கை. 96779 85574.

**எரிசக்தி மர வளர்ப்பு திட்டம்**: "ஆரோமீரா' நிறுவனம் விவசாயக் கழிவுகளை எரிசக்தியாக உபயோகித்து நட, நாட்டின் மின்சக்தி தேவையை பூர்த்திசெய்ய மின் உற்பத்தி ஆலைகளை நிறுவி நடத்திவருகிறது. மின் உற்பத்தி நிலையங்கள் புதுக்கோட்டையிலும், மதுரை மாவட்டம் டி.கல்லுப்பட்டியிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஊத்துமலை அருகில் சண்முகபுரத்திலும் இயங்கி வருகின்றன. எரிசக்தி திறன் நிறைந்த மரங்களை தேர்வு செய்து அதை வளர்க்க முன்வரும் விவசாயிகளை ஊக்குவிக்க ஒரு புதிய மரம் வளர்ப்பு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளனர்.
சூபாபுல், சவுக்கு, சுங்கினியானா, தைலமரம் மற்றும் மலைவேம்பு போன்ற குறுகிய காலத்தில் (4 வருடத்தில்) வறட்சியைத் தாங்கும் வல்லமை கொண்ட, மறுதாம்பு முறையில் வளரக்கூடிய வகைகள் பயிரிடப்பட்டு இத்திட்டத்தின் மூலம் பயன்பெறலாம். 95000 63058, 95000 63059, 95000 63076. தலைமை அலுவலகம்: ஆரோ மீரா எனர்ஜி கம்பெனி பிரைவேட் லிமிடெட், ஆரோ மீரா ஹவுஸ் எண்.29, ஷபி முகமது சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை-600 006. போன்: 044-2820 9800.-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

## நடமாடும் நாட்டுக்கோழி வளர்ப்பு

பதிவு செய்த நாள் : ஜனவரி 25,2012,00:00 IST



**வளர்ப்பு முறைகள்:** புறக்கடையில் கோழிவளர்ப்பு முறை: மிக தீவிர முறை: மிக தீவிர முறையில் இறைச்சிக்கோழிகள் மற்றும் முட்டைக்கோழிகளை ஒரே இடத்தில் வைத்து அதற்குத் தேவையான தண்ணீர் மற்றும் தீவனங்கள் அளித்து வளர்க்கப்படுகிறது. தீவனத்தின் செலவினம் கோழிவளர்ப்பின் 70-80 விழுக்காடுகள் இருப்பதால், நாட்டுக்கோழி உற்பத்தி செலவீனம் அதிகமாக இருக்கும்.

**தீவிர முறை - உலாவு தளத்துடன் கூடிய கூண்டுமுறை**: உலாவு தளத்தின் உட்புறத்தளம், காரை, மண் போன்றவைகளால் நிரப்பப் பட்டு கெட்டிப்படுத்தப்பட்டு, பசுஞ்சாணியால் மெழுகி விடப்படும். மழைக்காலங்களில் தரை, நனையாத முறையில் பாலிதீன் அல்லது உரச்சாக்கு மேற்கூரையாகத் தற்காலிகமாக மறைக்கப்படும். உலாவு தளத்தின் நாற்புறமும் அதனுடன் இணைக்கப்பட்டிருக்கும் கோழிக்கூண்டுகள் அருகில் வேப்பமரங்கள் வளர்க்கப்பட்டால் நோய்கள், காற்று, வெயில் என்பனவற்றினின்றும் கோழிகளுக்கு நல்ல பாதுகாப்பு கிடைக்கும். பாம்புகள் வராமல் தடுக்க நாகதாளிச் செடி, வசம்புச் செடி, சிரியநங்கை மற்றும் பெரியநங்கை செடியையும் ஓரமாகப் பாத்தியமைத்து வளர்த்தால் நல்ல பயனைத் தரும். கோழிகள் சில வேளைகளில் கீரைகள், பசும்புல் போன்றவற்றையும் உணவாக உட்கொள்ளும். அத்தேவையைப் பூர்த்தி செய்ய மண் சட்டிகளில் உரத்தோடு கலந்த மண்ணை நிரப்பிக் கீரைகளை வளர்த்து, வளர்ந்தபின் சட்டியுடன் உலாவுதளத்தின் உட்புறம் நான்கு பக்கமும் வைக்க, அவை ஒரு இயற்கை சூழலை உருவாக்கி, கோழிகளின் இனவிருத்தித் திறனை அதிகப்படுத்தும்.

**நாட்டுக்கோழி இனங்கள்**: நம் இந்தியாவில் மட்டும் 18 கோழி இனங்கள் உள்ளன. அவற்றில் தமிழகத்தில் 7 கோழியினங்கள் உள்ளன. அவை: குருவுக்கோழி, பெருவிடைக்கோழி, சண்டைக்கோழி அசில்கோழி, கடக்நாத் என்னும் கருங்கால் கோழி, கழுகுக்கோழி அல்லது கிராப்புக்கோழி என்னும் நேக்கட் நெக், கொண்டைக்கோழி, குட்டைக்கால் கோழி.

**உயர்ரக நாட்டுக்கோழி இனம்**: நந்தனம் கோழி ஆராய்ச்சி நிலையத்தில் நந்தனம் ஒன்று மற்றும் நந்தனம் இரண்டு என்ற இருவகை உயரினக் கோழிகள் உற்பத்தி செய்தனர். ஆந்திர மாநிலத்தில்

வனராஜா என்ற உயரினக்கோழியை உற்பத்தி செய்தனர். பெங்களூரு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தில் கிரிராஜா மற்றும் சுவர்ணதாரா என்னும் உயரினக் கோழிகளை உற்பத்தி செய்து புறக்கடை முறையில் கோழி வளர்ப்பதற்காக நமக்கு கொடுத்துள்ளனர்.

**கோழிகள் தேர்வு**: நல்ல ஆரோக்கியமான கோழிகள் மற்றும் சேவல்கள் மிடுக்காகவும் தன்னைச் சுற்றி நடக்கும் காரியங்களில் கவனமுள்ளவையாகவும் இருக்கும். வேகமான நடை, வேகமான ஓட்டம், தேவைக்கேற்ப சில மீட்டர்கள் தூரம் பறத்தல், சில நேரங்களில் கொக்கரித்தல், கூவுதலுமாக இருக்க வேண்டும். பொதுவாகச் சேவல்கள் இனச்சேர்க்கையில் பிரியமுள்ளவைகளாய் இருக்கும். நல்ல அகலமான நெஞ்சம், நீண்ட உடலமைப்பும் நல்ல சேவலுக்கு உதாரணமாகும். கோழியின் சுகத்தை கொண்டைல் பார் என்பார்கள். நல்ல சிவந்த பளிச்சென்ற கொண்டை நல்ல சுக தேகத்தைக் குறிக்கும். கால்கள் மஞ்சள் கலந்த பழுப்பு நிறத்துடன் இருக்க வேண்டும். நம் நாட்டு சூழலுக்கேற்ப வளரக்கூடிய ப்ரம்மா ரகக்கோழிகளை தேர்ந்தெடுப்பது நல்லது.

தேவையான அனைத்து உணவுச்சத்துக்களும் அடங்கிய சரிவிகிதத் தீவனத்தையே எப்பொழுதும் உபயோகிக்க வேண்டும். தீவனத் தொட்டியில் போதுமான இடவசதி, கோழிகளுக்குக் கிடைக்கும் வண்ணம் தேவையான எண்ணிக்கையில், தீவனத் தொட்டிகளை வைக்க வேண்டும். முதல் இரண்டு வாரம் வரை 60 செ.மீ. நீளம், 7.5 செ.மீ. அகலம், 3.5 செ.மீ. உயரம் கொண்ட தீவனத் தொட்டிகள் தலா 100 குஞ்சுகளுக்கு மூன்று தீவனத் தொட்டிகளும், மூன்று முதல் ஐந்து வாரம் வரை 90 செ.மீ. நீளம், 12.5 செ.மீ. உயரம் கொண்ட தீவனத் தொட்டிகளும், ஆறு முதல் எட்டு வாரம் வரை 120 முதல் 150 செ.மீ. நீளம், 15 செ.மீ. அகலம், 10 செ.மீ. உயரம் உடைய தீவனத் தொட்டிகள் தலா 100 கோழிகளுக்கு மூன்று வீதம் கொடுக்க வேண்டும். தீவனத் தொட்டியில் நான்கு வாரம் வரை ஒரு கோழிக்குத் தலா 5 செ.மீ. இடவசதியும், 5 முதல் 8 வாரம் வரை 7.5 செ.மீ. இடவசதியும் ஏற்படுத்தித் தரவேண்டும். தீவனத் தொட்டியின் மேற்புற விளிம்பு, கோழிகளின் முதுகுப்புறத்திற்கு இணையான நேர்கோட்டில் இருக்கும்படி வயதுக்கு ஏற்ப தீவனத் தொட்டியின் உயரத்தை மாற்றி அமைத்துவர வேண்டும்.

சரிவர அமைக்கப்பட்ட தீவனத் தொட்டிகளை மட்டுமே உபயோகிக்க வேண்டும். அரைக்கப்பட்ட தீவனத்தைத் தொடர்ந்து பல நாட்களுக்குச் சேமித்து வைக்கக்கூடாது. தீவன மூடைகளை ஒரு அடி உயரம் உள்ள மரச்சட்ட அமைப்புகளின் மீது சுற்றுப்புறச் சுவரிலிருந்து ஒரு அடி உயரம் உள்ள மரச்சட்ட அமைப்புகளின் மீது சுற்றுப்புறச் சுவரிலிருந்து ஒரு அடி தள்ளி இருக்கும்படிதான் அடுக்கி சேமிக்க வேண்டும்.டாக்டர் வீ.தவசியப்பன், முனைவர் வெ.பழனிச்சாமி,முனைவர் ரா.தங்கதுரை,குன்றக்குடி, 04577-264 288.

**திருந்திய நெல் சாகுபடியில் அதிக மகசூல் : லாபமடைந்த விவசாயி பெருமிதம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 25,2012,00:12 IST

கருத்தை பதிவு செய்ய

பொன்னேரி : திருந்திய நெல் சாகுபடி மூலம், சாதாரண முறையில் நெற்பயிரிட்டவர்களை காட்டிலும், அதிக மகசூலையும், லாபத்தையும் பெற்ற விவசாயி பெருமிதம் அடைந்துள்ளார். குறைந்த விதை நெல், குறைந்த பணியாளர்கள், குறைந்த நீர் மற்றும் குறைந்த விதை நெல்லை பயன்படுத்தி, அதிக மகசூல் பெற கொண்டு வரப்பட்ட திருந்திய நெல் சாகுபடி திட்டம், விவசாயிகளிடையே வரவேற்பை பெற்றுள்ளது.

குறைந்த செலவு; அதிக லாபம்

மீஞ்சூர் ஒன்றியத்திற்குட்பட்ட தேவதானம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ரமேஷ், 15 ஏக்கர் நிலப்பரப்பில் இத்திட்டத்தை செயல்படுத்தி, அதிக மகசூலை பெற்றுள்ளார்.

இதுகுறித்து ரமேஷ் கூறும்போது, ""செம்மை நெல் சாகுபடி முறைக்கு தேவையான விதை நெல், நெற்பயிரை நடுவதற்கு மார்க்கர் கருவி, களையெடுப்பிற்கு, "கோனோவீடர்' இயந்திரம், உர வகைகளையும் வேளாண்மைத் துறை அதிகாரிகள் வழங்கி பல்வேறு ஆலோசனைகளை கூறினர். சாதாரண முறையில் நெல் பயிரிட்டால் ஏக்கருக்கு, 25 முதல், 30 மூட்டை நெல் விளையும். ஆனால், செம்மை நெல் சாகுபடி முறையில் பயிரிட்டதால், 40 மூட்டை நெல் விளைந்துள்ளது. விவசாயத்திற்கு ஆட்கள் கிடைப்பதில்லை என்ற கவலை, செம்மை நெல் சாகுபடி திட்டத்தில் இல்லை. குறைந்த பணியாளர்களைக் கொண்டு, அதிக மகசூலை பெற முடிகிறது," என்றார்.

மீஞ்சூர் வேளாண்மைத் துறை அதிகாரி ஒருவர் கூறும்போது, ""நீர்வள நிலவள திட்டத்தின் மூலம் கொண்டு வரப்பட்ட செம்மை நெல் சாகுபடி முறையால், அதிக மகசூலை பெற முடியும். இத்திட்டம் குறித்த சந்தேகங்களுக்கு, அலுவலக நாட்களில் எங்களை அணுகினால், உரிய ஆலோசனைகள் வழங்க தயாராக உள்ளோம்," என்றார்.

திருந்திய நெல் சாகுபடி திட்டத்தில், வேளாண்மைத் துறை, ஒரு ஹெக்டேருக்கு இலவசமாக வழங்கப்படும் பொருட்கள்:

விதை நெல் 8 கிலோ

யூரியா 330 கிலோ

பொட்டாஷ் 80 கிலோ

சூப்பர் பாஸ்பேட் 300 கிலோ

உயிர் பூஞ்சான் கொல்லி 4.5 கிலோ

அசோஸ்பைரில்லம் 50 பாக்கெட்

ஜிங் சல்பேட் 25 கிலோ
பசுந்தால் உரம் விதை 40 கிலோ

**கால்நடை விவசாயிகளுக்கு இடுபொருள் வழங்கல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 25,2012,01:35 IST

கடலூர் : கடலூர் கால்நடை மருத்துவ பல்கலைக் கழக பயிற்சி மற்றும் ஆராõய்ச்சி மையம் சார்பில் கால்நடை விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கும் விழா நடந்தது. பண்ருட்டி அடுத்த சாத்திப்பட்டில் நடந்த விழாவை ஆராய்ச்சி மையத் தலைவர் முனைவர் அரங்க ரவீந்திரன் துவக்கி வைத்தார். ஊராட்சித் தலைவி லூர்துமேரி, முன்னாள் ஒன்றிய சேர்மன் புஷ்பராஜ் வாழ்த்திப் பேசினர். பல்கலைக்கழக உதவி இயக்குனர் ராமமூர்த்தி, இயக்குனர் புரு÷ஷாத்தமன் சிறப்புரையாற்றினர். கால்நடைகளுக்கான இடுபொருள்களை துணைவேந்தர் பிரபாகரன் விவசாயிகளிடம் வழங்கினார். விழாவில், புரதச்சத்து கலந்த பசும்புல் 7 டன், தீவனம் 100 கிலோ உட்பட பல்வேறு விதமான பொருட்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. முகாமில் பேராசிரியர்கள், என்.எஸ்.எஸ்., மாணவர்கள் பங்கேற்றனர். உதவிப்பேராசிரியர் திருமால்வளவன் நன்றி கூறினார்.
துணைவேந்தர் பிரபாகரன் கூறுகையில், "புயலால் முந்திரி, பலா ஆகியவற்றால் விவசாயிகளுக்கு அதிக இழப்பு ஏற்பட்டுள்ளது. கால்நடைகளை பராமரித்து குறுகிய காலத்தில் வருமானத்தை பெருக்கலாம்' என்றார்.

**பயிர்களுக்கான நிவாரண தொகை விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 25,2012,01:55 IST

கருத்தை பதிவு செய்ய

விழுப்புரம் : தானே புயலால் பாதித்த பயிர்களுக்கான நிவாரண தொகை விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது என கலெக்டர் மணிமேகலை தெரிவித்துள்ளார். விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த டிச., 30ம் தேதி வீசிய தானே புயலால் வீடுகள், பயிர்கள், மரப்பயிர்கள் பாதித்தன. பயிர் பாதிப்பு குறித்து வருவாய், வேளாண்மை, தோட்டக்கலை துறை பணியாளர்கள் மூலம் கணக்கெடுப்பு நடந்தது. பாதித்த நெற்பயிருக்கு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய், சிறுதானியம், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், கரும்பு, காய்கறி மற்றும் மலர் பயிர்கள் உள்ளிட்ட பாசன வசதி பயிர்கள் ஏக்கர் ஒன்றுக்கு 7500 ரூபாயும், மானாவரி பயிர்களுக்கு ஏக்கர்

ஒன்றுக்கு 4000 ரூபாயும், மா, பலா, முந்திரி, தென்னை மரப்பயிர்களுக்கு 9,000 ரூபாய் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.
விழுப்புரம் மாவட்டத்தில் வேளாண் பயிர்களுக்கு 16.82 கோடி ரூபாயும், தோட்டக்கலை பயிர்களுக்கு 6.03 கோடி ரூபாய் உட்பட 22.85 கோடி ரூபாய் 60,441 விவசாயிகளுக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் உரிய விவசாயிகள் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. கணக்கு இல்லாத விவசாயிகளுக்கு புதிய வங்கி கணக்கு துவங்கப்பட்டு நிவாரணத் தொகை அவரவர் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. பயனா ளிகள் விபரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள் ளது. விவசாயிகள் குறைகளை கேட்டு நிவர்த்தி செய்ய தனி தகவல் பிரிவு வேளாண்மை கூட்டுறவு வங்கியில் துவங்கப்பட் டுள்ளது.இவ்வாறு கலெக்டர் மணிமேகலை தெரிவித்துள்ளார்.

**நெல் அறுவடை தீவிரத்தால் "கிடை'க்கு வந்த ஆடுகள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 25,2012,02:00 IST

கருத்தை பதிவு செய்ய

கோபிசெட்டிபாளையம்: எல்.பி.பி., பாசனத்தில் நெல் அறுவடை பணி தீவிரமடைந்ததை தொடர்ந்து, கோவை பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கான குறும்பின ஆடுகள் மேய்ச்சலுக்கு வந்துள்ளன. கோபி சுற்று வட்டாரத்தில் எல்.பி.பி., தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தின் மூலம், நெல், கரும்பு, மஞ்சள், வாழை ஆகிய அதிகளவில் பயிரிடப்படுகிறது. தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் மூலம் தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மான்ய விலை விதை உள்ளிட்ட வசதிகள் செய்து தரப்படுகிறது. மேலும், விவசாயக் கூலித் தொழிலாளர்கள் பற்றாக்குறை, உரம் உள்ளிட்டவை விலை உயர்வு காரணமாக தோட்டக்கலை பயிர்களான கத்தரி, வெண்டை, சிறிய வெங்காயம், தக்காளி, மிளகாய், சேனைக்கிழங்கு ஆகியவற்றுக்கு விவசாயிகள் மாறி வருகின்றனர். கிராமப்புறத்தில் குறைந்தளவில் விவசாயம் நிலம் வைத்துள்ள விவசாயிகள், தோட்டக்கலை பயிர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர். எல்.பி.பி., பாசனத்தில் முதல்போகத்தில் பயிரிட்டப்பட்ட நெல் அறுவடை துவங்கிய, அறுவடை பணி மும்முரமாக நடக்கிறது. ஆட்கள் பற்றாக்குறை காரணமாக இயந்திரம் மூலம் அறுவடை பணி அதிகளவில் நடக்கிறது. இயந்திரம் மூலம் அறுவடை செய்யும்போது, வைக்கோல் வீணாகிறது. வீணாகும் வைக்கோல் வயல்களில் ஆங்காங்கே வைக்கோல் சிதறிக் கிடக்கிறது. ஆட்கள் மூலம் அறுவடை செய்யும் போது வைக்கோல் வீணாவது கிடையாது. கோவை, உடுமலைபேட்டை, திருப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் குறும்பின ஆடுகள் அதிகளவில் வளர்க்கப்படுகிறது. எல்.பி.பி., தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் அறுவடை சீஸன் நேரத்தில் கோவை பகுதியில் உள்ள குறும்பின ஆடுகள் இங்கு

மேய்ச்சலுக்கு கொண்டு வரப்படுகிறது. நான்கு, ஐந்து பேர் சேர்ந்து ஆயிரக்கணக்கான ஆடுகளை மேய்ச்சலுக்கு கொண்டு வருகின்றனர். ஓரிடத்தில் வலை மூலம் வேலி அமைத்து, ஆடுகளை பாதுகாக்கின்றனர். காலை முதல் மாலை வரை அறுவடை செய்யப்பட்டுள்ள இடத்தில் ஆடுகளை மேய்ச்சலுக்கு விடுகின்றனர். இதற்காக அவர்களுக்கு ஆண்டுக்கு 40 ஆயிரம் ரூபாய் கூலி தரப்படுகிறது. ஆடு மேய்ப்பவர்கள் கூறியதாவது: கோவை சுற்று வட்டாரத்தில் அதிகளவில் குறும்பின ஆடுகள் வளர்க்கப்படுகிறது. ஆட்டின் முடி மூலம், "ஸ்வெட்டர்' தயாரிக்கப்படுகிறது. இறைச்சிக்கு ஆடு பயன்படுகிறது. வெள்ளாட்டை விட, குறும்பின ஆட்டின் இறைச்சி விலை குறைவு. 500 முதல் 1,000 ஆடுகள் வரை மேய்ச்சலுக்கு கொண்டு வருகிறோம். எங்களுக்கு ஆண்டுக்கு, 40 ஆயிரம் ரூபாய் கூலி தருகின்றனர். அறுவடை சீஸன் எங்குள்ளதோ, அப்பகுதிக்கு ஆடுகளை ஓட்டிச் செல்வோம். கோபி சுற்று வட்டாரத்தில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் எல்.பி.பி., பாசனம் என, தொடர்ந்து அறுவடை நடப்பதால், இப்பகுதிக்கு அடிக்கடி வருகிறோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**காய்கறி மார்க்கெட்டில் இரட்டை சுங்க வரி :விவசாயிகள் குற்றச்சாட்டு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 24,2012,23:58 IST

கருத்தை பதிவு செய்ய

திருப்பூர் : தென்னம்பாளையம் காய்கறி மார்க்கெட்டில் இரட்டை சுங்கம் வசூலிப்பதாக விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர். இதுதொடர்பாக, மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தென்னம்பாளையம் மார்க்கெட்டுக்கு, தினமும் நூற்றுக்
கணக்கான விவசாயிகள் காய்கறி கொண்டு வந்து மொத்த விற்பனை செய்கின்றனர்.
பொங்கலூர், பல்லடம், சுல்தான்பேட்டை ஒன்றிய பகுதிகளில் இருந்தும், இதர மாவட்டங்களில் இருந்தும், தினமும் 100 டன் அளவுக்கு காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. சிறு, குறு வியாபாரிகள் 300க்கும் அதிகமானவர்கள் தினமும் வந்து காய்கறிகளை வாங்கிச் செல்கின்றனர்.

மார்க்கெட்டுக்கு மேற்கு பகுதியில், ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல், திங்கள் கிழமை மதியம் வரை கால்நடை சந்தை செயல்
படுகிறது. ஒரே நளில் நடக்கும் சந்தைக்கு, பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான மாடுகளும், எருமைகளும் கொண்டு வரப்படுகின்றன. தென்னம்பாளையம் சந்தையில், மாநகராட்சி சார்பில் ஏலம் நடத்தி, சுங்கம் வசூலிக்கும்
உரிமம் வழங்கப்படுகிறது.

தமிழகத்தில் எங்கும் இல்லாத வகையில், தென்னம்பாளையத்தில் காய்கறிகளை உள்ளே

கொண்டு வரும்போது விவசாயிகள் சுங்கம் செலுத்துகின்றனர். சிறு, குறு வியாபாரிகள் வாங்கிச் செல்லும் போதும் வரி செலுத்துகின்றனர். ஒரே பொருளுக்கு இரட்டை சுங்க வரி வசூலிப்பதால், பொதுமக்களுக்கு காய்கறி விற்கும்போது, விலை
அபரிமிதமாகிறது.

விவசாயிகள் கூறியதாவது:

தென்னம்பாளையத்தில், இரட்டை சுங்கம் வசூலிக்கும் நடைமுறை 20 ஆண்டுகளாக தொடர்கிறது. விவசாயிகளிடம் இருந்து, காய்கறி கூடை மற்றும் மூட்டைகளுக்கு 50 காசு முதல் 3.50 ரூபாய் வரை சுங்கம்
வசூலிக்க வேண்டும்.

மாட்டு வண்டி அல்லது கைவண்டியில் காய்கறிகளை எடுத்து வந்தால், 1.50 ரூபாய், இரட்டை மாட்டு வண்டி, நான்கு சக்கர தள்ளுவண்டிகளில் எடுத்து வந்தால் ஐந்து ரூபாய், மினி ஆட்டோ, டெம்போ வேன், டிராக்டர்களுக்கு 35 ரூபாய், லாரிகளில் காய்கறி வந்தால் 60 ரூபாய், இதர வாகனங்களுக்கு ஐந்து ரூபாய் சுங்கம் வசூலிக்கப்படுகிறது. மாடு களை கொண்டு வரும்போது, ஒரு மாட்டுக்கு 10 ரூபாய் முதல் 20 ரூபாய் வரையிலும், வண்டி
களுக்கு 50 ரூபாய் வரையிலும் சுங்கம் வசூலிக்கப்படுகிறது.

மாநகராட்சி அறிவித்துள்ளதை காட்டிலும், ஏலம் எடுப்பவர்கள் கூடுதல் தொகை வசூலிக்கின்றனர். உள்ளே வரும் காய்கறி மற்றும் வண்டிகளுக்கு இத்தகைய வாடகை வசூலிக்கப்படுகிறது. காய்கறிகளை சிறு, குறு வியா
பாரிகள் வாங்கிச் செல்லும்போதும், அவர்களிடம் 10, 20 மற்றும் 30 ரூபாய் வரை சுங்கம் வசூலிக்கப்படுகிறது. காய்கறிகளுக்கு இரட்டை சுங்கம் வசூலிப்பதால் வியாபாரிகள் விற்கும்போது, பொதுமக்களிடம் கூடுதல் தொகையை வசூலிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. மாடுகளை கொண்டு வரவும் வரி வசூலிக்கப்படுகிறது; மாடு வாங்கிச் செல்பவரும் தனியாக வரி செலுத்த வேண்டிய பரிதாப நிலை தொடர்கிறது. நீண்ட காலமாக நடக்கும் வரி வசூல் முறைகேட்டை தடுத்து நிறுத்த, மாநக ராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## நெல் சாகுபடி பயிற்சி

பதிவு செய்த நாள் : ஜனவரி 25,2012,01:49 IST

கருத்தை பதிவு செய்ய

ஆர்.எஸ்.மங்கலம் : ஆர்.எஸ்.மங்கலத்தில் விவசாய தொழிலாளர்களுக்கு, திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண் இணை இயக்குனர் ராஜேந்திரன் தலைமை வகித்து சிறப்புரை ஆற்றினார். துணை வேளாண் இயக்குனர், உதவி இயக்குனர் முகமது அப்துல்

நசீர் ஆகியோர் தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கினார். ஏற்பாடுகளை துணை வேளாண் அலுவலர் தனதுரை, உதவி வேளாண் அலுவலர் ராதாகிருஷ்ணன் ஆகியோர் செய்திருந்தனர்.

**திருந்திய நெல் சாகுபடி மூலம் அதிக உற்பத்தி செய்யும் விவசாயிக்கு ரூ. 5 லட்சம் பரிசு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 25,2012,01:36 IST

கருத்தை பதிவு செய்ய

தஞ்சாவூர்: திருந்தி நெல் சாகுபடி தொழில்நுட்பத்தினை கடை பிடித்து மாநிலத்திலேயே அதிக உற்பத்தி திறன்பெறும் விவசாயிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும்வகையில், சிறப்பு விருது ஒன்றுக்கு ஐந்து லட்சம் ரூபாய் சிறப்பு பரிசும், 3500 ரூபாய் மதிப்புள்ள பதக்கமும் ஒவ்வொரு ஆண்டு குடியரசு தினத்தன்று தமிழக முதல்வரால் அறிவிப்பு செய்யப்பட்டு, அரசு உத்தரவு வெளியிடப்பட்டுள்ளது. இதில் விவசாயிகள் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து தஞ்சை கலெக்டர் பாஸ்கரன் வெளியிட்ட அறிக்கை: திருந்திய நெல் சாகுபடியில் அதிக மகசூலுக்கான பரிசு பெற குறைந்த பட்சம் 50 சென்ட் நிலம் அறுவடை செய்யப்பட வேண்டும். நில உரிமையாளர்கள் மற்றும் குத்தகைதாரர்களும் பங்கேற்கலாம். இப்போட்டியில் பங்குபெற விரும்பும் விவசாயிகள் 150 ரூபாய் பதிவுக் கட்டணமாக செலுத்த வேண்டும். சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர, இதர மாவட்டங்களில் உள்ள அனைத்து விவசாயிகளும் போட்டியில் பங்கேற்கலாம். குறைந்தபட்ச நெல் மகசூல் 2,500 ஏக்கர் இருக்க வேண்டும். போட்டியில் கலந்து கொள்பவர்கள் படிவத்தினை பெற்று, பூர்த்தி செய்து பத்திர கட்டணத்துடன் சம்மந்தப்பட்ட வேளாண் உதவி இயக்குனரிடம் சமர்ப்பிக்க வேண்டும். பதிவு கட்டணத்துக்கான ரசீது விவசாயிகளுக்கு கொடுக்கப்படும். மாநில அளவு போட்டிக்கான கடைசி தேதி அந்த நிதியாண்டில் மார்ச் 31 தேதியாகும். போட்டியில் கலந்து கொள்பவர் அறுவடை செய்யும் தேதியை 15 நாட்களுக்கு முன்பு சம்மந்தப்பட்ட வேளாண் உதவி இயக்குனர்களுக்கு நேரிலோ அல்லது பதிவு தபாலிலோ அனுப்பி, அதற்கான ஒப்புகை பெற்று கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் விவசாயிகள் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. பதிவுக் கட்டணம் எந்த சூழ்நிலையிலும் திருப்பித் தரப்பட மாட்டாது. மாவட்ட வேளாண் இணை இயக்குனர்கள் அறுவடை தேதி முடிவு செய்து, அதை வேளாண் இணை இயக்குனர்கள் அறுவடை தேதி முடிவு செய்து, அதை வேளாண் கமிஷனர் அல்லது அவரது பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் வகையில் முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும். நடப்பாண்டில் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு, அடுத்தாண்டு நடக்கும் குடியரசு தின விழாவில் விருது வழங்கப்படும். மாநில அளவில் பயிர் விளைச்சல் போட்டிக்கு தேர்வு செய்யப்பட்ட குழுவே சிறப்பு விருதுக்கான விவசாயியை தேர்வு செய்ய பயன்படுத்தலாம். சிறப்பு விருதுக்கான விவசாயியை தேர்வு செய்யும் குழுவில், வேளாண்

கமிஷனர் அல்லது அவரது பிரதிநிதி, கலெக்டர் அல்லது அவரது பிரதிநிதி, வேளாண் இணை இயக்குனர், அவரது பிரதிநிதி, தேர்வு செய்யப்பட்ட மூன்று முன்னோடி விவசாயிகளில் ஒருவர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள். இதில் குறைந்த அளவு மூன்று குழு உறுப்பினர்கள் அறுவடையில் கலந்து கொள்ள வேண்டும். போட்டிக்கு தேர்வு செய்யப்பட்ட நிலம் சம்மந்தப்பட்ட வேளாண் உதவி இயக்குனரால் மேற்பார்வையிடப்படும். அந்த நிலத்தில் மகசூலுக்கு பரிந்துரைக்கப்பட்ட மகசூலான 2,500 கிலோ, ஏக்கருக்கு குறைவாக இருந்தால் அந்த நிலம், சமமந்தப்பட்ட விவசாயிக்கு காரணத்தை தெரிவித்து தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.சிறப்பு விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட விவசாயி வேளாண் கமிஷனரால் அறிவிக்கப்படுவார். நெல்லில் பயிர் விளைச்சல் போட்டிக்கு பதிவு செய்யப்பட்ட விவசாயி சிறப்பு விருதுக்கு பதிவு செய்ய இயலாது. இந்த நிபந்தனையில் எந்த வேறுபாடுகள் காணப்பட்டாலும் அந்த விவசாயி அந்த ஆண்டுக்கான பயிர் விளைச்சல் மற்றும் சிறப்பு விருதுக்கான போட்டியில் கலந்து கொள்ள தகுதியற்றவர் ஆவார். வேளாண் கமிஷனரால் நியமிக்கப்பட்ட முன்னோடி விவசாயி, சிறப்பு விருதுக்கான அறுவடையில் கலந்து கொள்வதற்கான பயணம் மேற்கொள்ள முதல் தர குழுவாக கருதப்படுவார். இந்த விதிகளை கடைபிடித்து திருந்திய நெல் சாகுபடியில், தமிழக அரசின் சிறப்பு விருது ஒன்றுக்கு ஐந்து லட்சம் ரூபாய் சிறப்பு பரிசும், 3,500 ரூபாய் மதிப்புள்ள பதக்கமும் பெறலாம்.

---

தினகரன்

**கரும்பு விலை டன்னுக்கு ரூ.2500 வழங்க கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்!**

ஈரோடு: உரவிலை உயர்வை வாபஸ் பெற வேண்டும். மத்திய அரசு மேற்கொண்டு வந்துள்ள உர விலை நிர்ணய கொள்கையை மாற்ற வேண்டும், மின்திருட்டு என்ற பெயரில் மாட்டுதொட்டிகளுக்கு தண்ணீர் விடுவதற்கு விவசாயிகளிடம் மின் வாரியம் அபராதம் வசூல் செய்வதை கைவிட வேண்டும்.

நெல் குவிண்டால் ஒன்று க்கு ரூ.2 ஆயிரம் விலை நிர்ணயம் செய்ய வேண்டும், தேர்தல் அறிக்கையின்படி கரும்பு விலை ரூ.2500 நிர்ணயிக்க வேண்டும்.

மஞ்சள் பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதி வழங்க வேண்டும் பண்ணைசாரா கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும், வனவிலங்குகளால் ஏற்படும் சேதத்திற்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஈரோட்டில் தமிழக விவசாயிகள் சங்கம் (நாராயணசாமிநாயுடு) சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஈரோடு மத்திய தபால் அலுவலகம் முன்பு நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் பெரியசாமி தலைமை தாங் கினார். மாநில பொருளாளர் வேலுமணி, துணை தலைவர் வேலுநாயக்கர், ஈரோடு மாவட்ட கூட்டமைப்பு தலைவர் காசியண்ணன், தடப்பள்ளி அரக்கன்கோட்டை செயலாளர் தளபதி, காளிங்கராயன் பாசன சபை தலைவர் வேலாயுதம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் கோரிக்கைகளை கையில் கரும்புடன் விவசாயிகள் கோஷங்கள் எழுப்பினர்.

வேளாண் விளை பொருட்கள்

ரூ.26.37 லட்சத்திற்கு விற்பனை

அந்தியூர், ஜன.24: அந்தியூர் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் நேற்று நடந்த ஏலத்திற்கு 32 ஆயிரம் தேங்காய் வந்திருந்தது.

சிறியது ரூ.2.50 முதல் பெரியது ரூ.7.50 வரை ரூ.1 லட்சத்து 80 ஆயிரத்துக்கு விற்பனை ஆனது. தேங்காய் பருப்பு 100 மூட்டை வந்திருந்தது. கிலோ ரூ.38.20 முதல் ரூ.45.40 வரை ரூ.2 லட்சத்திற்கும், எள் 6 மூட்டைகள் கிலோ ரூ.48.20 முதல் ரூ.59.20 வரை ரூ.18 ஆயிரத்திற்கும், ஆமணக்கு 25 மூட்டைகள் வந்திருந்தன.

கிலோ ரூ.35 முதல் ரூ.45.25 வரை ரூ.62 ஆயிரத்திற்கும், மக்காசசோளம் 200 மூட்டைகள் கிலோ ரூ.11.57 முதல் ரூ.12.09 வரை ரூ.2.50 லட்சத்திற்கும், துவரை 500 மூட்டைகள் ரூ.25. 56 முதல் ரூ.32.09 வரை ரூ.16 லட்சத்திற்கும், பச்சை பயிறு 10 மூட்டைகள் கிலோ ரூ.28.50 முதல் ரூ.35.07 வரை ரூ.32 ஆயிரத்திற்கும், அவரை 5 மூட்டைகள் கிலோ ரூ.24.29 முதல் ரூ.27.29 வரை ரூ.10 ஆயிரத்திற்கும், நிலக்கடலை 19 மூட்டைகள் காய்ந்தது மட்டும் கிலோ ரூ.36.39 முதல் ரூ.38.50 வரை ரூ.1 லட்சத்து 10 ஆயிரத்திற்கும், நரிபயிறு 35 மூட்டைகள் கிலோ ரூ.27.86 முதல் ரூ.32.06 வரை ரூ.1 லட்சத்திற்கும், பாசி பயிறு 50 மூட்டைகள் கிலோ ரூ.45.50 முதல் ரூ.51 வரை ரூ.75 ஆயிரத்திற்கும் ஏலம் போனது.

இது ரூ.26 லட்சத்து 37 ஆயிரத்திற்கு வேளாண் விளை பொருட்கள் விற்பனை ஆனது. தற்போது அந்தியூர் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் பயிறு வகைகள் இந்த வாரம் முதல் வர துவங்கியுள்ளது. மேலும் 1 மாதம் வரை தொடர்ந்து பயறு வகைகள் வரத்து இருக்கும்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## நடப்பு பருவத்திற்கான பருத்தி உற்பத்தி 3.45 கோடி பொதிகளாக மறுமதிப்பீடு

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு,மும்பை

2011 அக்டோபர் மாதம் துவங்கிய நடப்பு பருவத்தில் பருத்தி உற்பத்தி 3.45 கோடி பொதிகளாக குறைத்து மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது, முதலில் 3.56 கோடி பொதிகளாக இருக்கும் என மதிப்பிடப்பட்டிருந்தது.

மகாராஷ்டிரா மற்றும் ஆந்திரபிரதேச மாநிலங்களில் உற்பத்தி குறைந்ததால் நாட்டின் மொத்த பருத்தி உற்பத்தி குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், நடப்பு பருவத்தில், பருத்தி ஏற்றுமதி முந்தைய இலக்கான 80 லட்சம் பொதிகளிலிருந்து 84 லட்சம் பொதிகளாக அதிகரிக்கும் என மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.